
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 3 | அக்டோபர் 1990 | இதழ் 10

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர்:-

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை
செவ்வாய் : மாலை 7-15—8-30...ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)
புதன் : மாலை 3-30—5-00. சகோதரிகள் ஐக்கிய கூட்டம் (ஒருவாரம்விட்டு ஒருவாரம்)
வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
சனி : மாலை 7-00—9-00...மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


1. மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டோ? 1-5
2. ஞானஸ்நானம் பற்றிய சில கேள்விகள். 6-10
3. கணவன்மார்களுக்கு ஓர் கவன ஈர்ப்பு. 11-19
4. மரணம் என்றால் என்ன? 20-26
5. வீண் பழி சுமத்தாதீர்! 27-28

# THIRUMARAI AASAAN

Editor :
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India
Pleading for the restoration of pure New Testament Christianity!

Vol 3. Oct—1990 Issue 10


**ஆசிரியவுரை**

## மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?

நீதிமானாகிய லோத்துவின் நாட்களில் சோதோம், கொமோரா பட்டணங்களில் நடந்த அக்கிரமங்களைக் கண்டும், கேட்டும், நீதியுள்ள தன் இருதயத்தில் வாதிக்கப்பட்டதாக வேதத்தில் வாசிக்கிறோம். (2 பேது 2:7-8) நாம் வாழுகிற இந்நாட்களில் காரியங்கள் அதை விட மோசமாக நடந்து கொண்டிருப்பதை நாம் கண்டும் கேட்டும் செய்வதறியாது வாய் மூடி நிற்கிறோம்.

செய்தித்தாள்களை விரித்தாலும் வானொலி மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகளைத் திருகினாலும் நாம் காண்பதும், கேட்பதும் என்ன? கொலை, கொள்ளை, கற்பழிப்பு, லஞ்சம், தீ வைப்பு, ஜாதிக் கலவரங்கள் போன்ற விரும்பத்தகாத செய்திகள்தான். இது ஏதோ குறிப்பிட்ட ஒரு நாட்டின் நிலவரம் என்று சொல்லி விட முடியாது. உலகெங்கிலும் இதுவே நிலை. விமானம் கடத்தல், தலைவர்கள் பணயக் கைதிகளாக்கப்படல், ஒரே நாட்டில் வாழும் வெவ்வேறு இனத்தவர்களுக்குள்ளோ வெட்டு, குத்துகள், படுகொலைகள், பொதுச்சொத்து நாசம்-இவைகள் எல்லாம் அன்றாடச் செய்திகள்.

இப்படி நாள்தோறும் பெருகி வருகிற அபாயங்கள் நிறைந்த உலகத்தில் வாழ்வதைப் பற்றி பலவிதமான எண்ணங்கள் நமக்கு எழுவதுண்டு. அதில் ஒன்று: இப்படி நித்தம் நித்தம் பயத்தோடும் திகிலோடும் மரணத்தின் வாயலுக்குள் போய் விட்டுப் போய் விட்டு

திரும்பிக் கொண்டிருப்பதை விட, ஒரேயடியாக இந்த உலகத்தை விட்டே நிரந்தரமாகப் போய் விடலாமா என்பது. ஆனால் அது பிரச்சனையைத் தீர்க்குமா? மேலும் அது ஒரு வகையில் கோழைத் தனம் என்று கூடச் சொல்லலாம் வேறொன்று: நிலைமையைச் சரி செய்யலாம் என்ற எண்ணத்தில் தலையிட்டு நாமும் சேர்ந்து பிரச்சனைகளுக்குள் மாட்டிக் கொள்வதாகும்.

பெரும்பான்மையோர் செய்கிற முயற்சிகள் எல்லாம் இந்த ரகத்தைச் சேர்ந்தது தான். ஒரு மரத்தின் ஆணிவேரைச் கண்டு பிடித்து அதை வெட்டியெறியாமல் கிளைகளை மட்டும் நறுக்கி விட்டால் அது எப்படி மேலும், மேலும் செழித்து வளருகிறதோ அதைப்போன்று பிரச்சனை என்ன? அதன் தோற்றுவாய் எங்கே என்று புரிந்து கொள்ளமால் மேலெழுந்த வாரியாய் அதைத் தீர்த்துவிட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது, பிரச்சனைகள் தீர்வதற்குப் பதிலாக பிரச்சனைகள் நாளுக்கு நாள் உபரியாகிக் கொண்டிருக்கின்றன. வாலை அமுக்கினால் தலை தூக்குகிறது தலையை அமுக்கினல் வால் தூக்குகிற கதைதான்.

ஒருபுறம், முக்கிய வல்லரசுகளின் தலைவர்கள் கூடி உச்ச கட்ட சமாதான மாநாடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மறுபுறத்தில் பயங்கரமான யுத்தங்கள் வெடித்து அநேக உயிர்கள் சேதம், சொத்து, உடமைகள் நாசமடைந்ததாக வாசிக்கிறோம். காரணம் என்ன? பிரச்சனை என்ன? அது ஏன் எப்படி உருவாகிறது என்பதை ஆய்ந்து அறியாமல் மேலெழுந்த வாரியான முயற்சி-களை மேற்கொள்வதே. அப்படியானால் பிரச்சனைகளின் ஆணி வேரை எங்கே தேடுவது? அதைக்கண்டுபிடிக்க பரிசுத்த வேதாகமத்துக்குத் தான் போயாக வேண்டும். ஏனெனில் அது வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் படைத்துப் பராமரித்து வருகிற ஒன்றான மெய்தேவனாகிய கடவுளால் கொடுக்கப்பட்ட அறிவுப்பெட்டகம். அப்போஸ்தலனாகிய பேதுரு "ஜீவனுக்கும்" தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்ய வல்லமையானது. நமக்குத் தந்தருளனது மன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி திவ்ய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும், அருமையான வாக்குத் தத்தங்களும் அவைகளினுலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" என்று சான்றிதழ் வழங்குகிறார் (2 பேதுரு 1:3-4)

அதே காலத்தில் வாழ்ந்த அப்போஸ்தலன் பவுல் என்பவர் ரோமாபுரியில் இயங்கி வந்த கிறிஸ்துவின் சபையாருக்கு எழுதும்

போது, மக்கள் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு போவதற்கும், உலகத்தின் தார்மீக நிலை நாளுக்கு நாள் சீர் கேடு அடைந்து வருவதற்கும் என்ன காரணம் என்று சொல்லி, அதன் விளைவுகள் எப்படி இருக்கும், அது எங்குபோய் முடியும், என்று கூடச் சொல்லியிருக்கிறார். தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று பீடிகை போடுகிறார். காரணம் 1) மனுஷருடைய **அவபக்தியினால்** சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிறார்கள் (ரோமர் 1:18). 2) அவர்கள் தேவனை அறிந்திருந்தும் அவரை தேவன் என்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்தரியாமலும் இருக்கிறார்கள். அதன் விளைவு? மாந்தருடைய இதயம் இருளடைந்து விட்டது. அதிலிருந்து உதிக்கிற அவர்களுடைய சிந்தனைகள் வீணும் உணர்வற்றதுமாயிருக்கிறது. (ரோமர் 1:21) அவர்களுடைய நினைப்பு தாங்கள் ஞானிகள் என்று. ஆனால் செயல் : பைத்தியகாரனுடையது. (ரோமர் 1:22)

அந்தப் பைத்திய நிலையில் அவர்கள் செய்த காரியங்கள் யாவை? 1) அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகியவைகளின் ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். (ரோமர் 1:23) அதற்குத் தேவன் கொடுத்த தண்டனை : அவர்களை அசுத்தத்துக்கு ஒப்புக் கொடுத்தார், (ரோமர் 1:24) அதன் விளைவு? 1) தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்திக் கொண்டார்கள். 2) தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றினார்கள். 3) சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது, சேவித்தார்கள் (ரோமர் 1:25) அதன் விளைவு? 1) தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக கொடுத்தார் 2) அவர்களுடைய பெண்கள் சுபாவத்துக்கு விரோதமாக விரததாபத்தினாலே பொங்கி தகாததைச் செய்தார்கள். 3) அவர்களுடைய ஆண்கள் ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்தார்கள். தற்காலத்தில் நாம் கேள்விப்படுகின்ற எய்ட்ஸ் நோய் போன்ற கொடிய வியாதிகள் அதன் விளைவுகள். அது மட்டுமல்ல இன்றைக்கு நாம் காண்கிற அனைத்து ஒழுக்கக் கேடுகள், வேசித்தனம், துரோகம், பொருளாசை, குரோதம், பொறாமை, கொலை, வாக்குவாதம், வஞ்சகம், வன்மம், புறங்கூறுதல் அவதூறு, தேவபகை, துராகிருதம், அகந்தை, வீம்பு, பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கும் இயல்பு, பெற்றோர்க்கு கீழ்ப்படியாமை, உணர்வற்ற தன்மை, உடன்படிக்கை மீறல், சுபாவ அன்பில்லாமை, இணங்காமை, இரக்கமின்மை, (ரோமர் 1;26-31) ஆகியவைகள்.

ஒரு தோட்டத்தில் களை முளைத்து, முள் வளர்ந்து, மழை மாரியின்றி, பாங்கின்றி பாழடைந்து, கிடக்கும்போது, அங்கே நற்கனிகளைத் தேடி அலைவது வீண் வேலை அன்றோ! முதலாவது களை களைஅகற்றி, முள், கல் பொறுக்கி, காடு திருத்தி உழுது, பண்படுத்தி, நல்ல விதைகள் தூவி, நீர் பாய்ச்சி, உரமிட்டால் அல்லவா பயிர்கள் செழித்து வளர்ந்து கனி கொடுக்கும்? அது போல மேலே நாம் கண்ட தீக்குணங்கள் மாந்த உள்ளங்களிலிருந்து அகற்றப்பட்டு, மனதைப் பண்படுத்தி, நல்ல பண்புகளை வளர்த்து அவைகளைக் கடைப்பிடிக்கத் தூண்டினால் தானே நாடு நலம் பெறும். மாந்த இனம் ஒருவருக்கொருவர் இணக்கமுள்ளவர்களாக சமாதானமாக வாழுவார்கள். இவைகளையெல்லாம் செய்யாமல் வெறுமனே சமாதானம், சமாதானம் என்று வாயால் சொல்லிக் கொண்டிருந்தால் சமாதானம் ஏற்பட வாய்ப்பேது?

அப்படியானால் இந்த சமாதானம், மகிழ்ச்சி, இணக்கம் ஆகியவைகளை அடைய வழி யாது? ஒருவனுக்கு ஏற்பட்டிருக்கும் நோய் இன்னதென்று கண்டு பிடித்துச் சரியாகக் கூற ஒரு வைத்தியனுக்கு முடியுமானால் அந்த நோய்க்கான மருந்தும் அவனால் கொடுக்க முடியும் என்று நம்பலாமே! அதே போன்று இவ்வளவு துல்லியமாய் உலகின் அவல நிலையையும், மாந்த சமுதாயத்தின் சீர் கேடுகளையும் படம் பிடித்துக் காட்டுகிற பரிசுத்த வேதாகமத்தில் அதைத் தீர்ந்து வைக்கும் வழிமுறைகளும் காணப்படுவது நிச்சயமில்லவா?

ஆகவே நண்பர்களே, இயேசுவின் அன்பான உருக்கமான அழைப்பை உருக்கமான ஏற்றுக் கொண்டு அவரிடம் வாருங்கள் வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது (மத் 11 : 28-30)

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே—அன்பும் கரிசனையுமான அழைப்பு

நீங்கள் எல்லோரும், என்னிடத்தில்
வாருங்கள் — பாரபட்சமற்ற உலகளாவிய அழைப்பு

உங்கள் ஆத்துமாவுக்கு இளைபாறுதல்
தருவேன்—வாக்குத்தத்தம் நிறைந்த அழைப்பு

நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய்
இருக்கிறேன்—தன்னிலை விளக்க அழைப்பு

என் நுகம் மெதுவாயும் என் சுமை
இலகுவாயும் இருக்கிறது—பயம் நீக்கும் அழைப்பு

இன்னும் ஏன் தாமதம்! நண்பர்களே! நிச்சயமான தீர்வு உறுதியாக் கப்பட்டிருக்கிறதே விரைந்து வாரீர்! அவரன்றி இரட்சிப்பு இல்லை அவரே வழி, அவரே சத்தியம், அவரே ஜீவன்.

**E. Z. செல்வநாயகம்**

## நியாயமான மன்றாட்டு

இரண்டு மனு உம்மிடத்தில் கேட்கிறேன் நான் மரிக்கும் பரியந்தமும் அவைகளை எனக்கு மறுக்காமல் தாரும்.

மாயையையும் பொய் வசனப்பையும் எனக்குத் தூரப்படுத்தும். தரித்தரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக.

நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து கர்த்தர் யார் என்று சொல்லாத படிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்.

# ஞானஸ்நானம் பற்றிய சில கேள்விகள்

ஞானஸ்நானம் பற்றி பலர் பல சமயங்களில் கேள்விகள் பல கேட்பதுண்டு. பதில் தெரிந்து கொள்ளும் ஆர்வமின்றி நமக்கு சவால் விடும் நோக்கில் இக்கேள்விகளை இவர்கள் தொடுப்பர். எந்த நோக்கத்தில் கேள்விகளை விடுத்த போதிலும், முக்கியமான அத்தகைய சில கேள்விகளுக்கு வேதாகமத்தின் அடிப்படையில் இங்கு பதிலளிப்போம்.

**கிறிஸ்து ஏன் ஞானஸ்நானம் பெற்றார்? தேவனின் குமாரனாகிய அவர் பாவமற்றவராயிற்றே :** அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முன்பு யோவான் ஸ்நானனும் இவ்வாறு தானே எண்ணினான். கிறிஸ்து யோவானிடம் கூறினார். ''இப்பொழுது இடங்கொடு; இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது'' (மத் 3:15) இவ்விளக்கத்தைக் கேட்ட யோவான் கிறிஸ்துவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். கிறிஸ்து ஞானஸ்நானம் பெறாவிட்டால் என்ன நடந்திருக்கும்? ''கிறிஸ்துவே ஞானஸ்நானம் பெறவில்லை; நாம் ஏன் பெற வேண்டும்?'' என்று காரணங்காட்டி ஞானஸ்நானம் தேவையற்றது என மக்கள் நியாயப்படுத்தக்கூடும். அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம், இத்தகைய கேள்வியே எழாதவாறு கிறிஸ்து செய்திருக்கிறார்.

கிறிஸ்து எவ்வாறு ஞானஸ்நானம் பெற்றார்? தண்ணீரைத் தெளித்தா? அல்லது, தலையில் தண்ணீரை ஊற்றியா? அல்லது தண்ணீரில் மூழ்கியா? கிறிஸ்துவைப் பற்றிய திரைப்படங்கள் பலவற்றில் அவர் தலையில் யோவான் சிறிது தண்ணீரை ஊற்றி 'ஞானஸ்நானம்' கொடுப்பதான காட்சியை நாம் காண முடிகிறது. வேதாகமம் கூறும் உண்மைக்கு முற்றிலும் மாறுபட்டது இக்காட்சி. அப்போஸ்தலர் யோவான் கூறுகிறார். **''சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோான் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாக இருந்த படியால், யோவானும் அங்கு ஞானஸ்நானம் கொடுத்து வந்தான்''** (யோவான் 3:22,23) கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது, யோவான் யோர்தான் நதியிலே ஞானஸ்நானம் கொடுத்து வந்தான். கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபின் தண்ணீரிலிருந்து கரையேறினார் என மத்தேயும் மார்க்கும் குறிப்பிடுகின்றனர். யோவான் சிறிது தண்ணீரைத் தெளித்தோ அல்லது தலையில் ஊற்றியோ ஞானஸ்நானம்

கொடுத்ததாக இருப்பின் கிறிஸ்து நூறு மைல் நடந்து யோவான் ஞானஸ்நானம் கொடுத்த சாலீம் ஊருக்கு வரவேண்டியதில்லை மேலும் யோவானும் தண்ணீர் **மிகுதியாக** இருந்த சாலீம் ஊரை ஞானஸ்நானம் கொடுப்பதற்கு தேர்ந்தெடுத்திருக்க வேண்டியதில்லை.

அப்போஸ்தலர் நடபடி 8ம் அதிகாரம் 26-39 வசனங்களில் குறிப்பிட்டபடி எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெறுகையில் பிலிப்பும் மந்திரியும் தண்ணீரில் இறங்கினார்கள் எனவும், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததாகவும், பின் அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறியதாகவும் நாம் காண்கிறோம். மேற் சொன்ன இரு சம்பவங்களிலிருந்தும் ஞானஸ்நானம் பெறதண்ணீரில் மூழ்கி எழுவது அவசியம் என சந்தேகத்திற்கிடமின்றி தெரிகிறது. வீண் வாதத்திற்கு இங்கு இடமில்லை.

ஒருவன் ஞானஸ்நானம் பெறுவது அவசியமென்றால், அதாவது: இரட்சிப்படைய அவசியமென்றால், மார்க் 16:16 ல் விசுவாசம் **இன்றி** ஞானஸ்நானம் **பெறாதவன்** ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என கிறிஸ்து ஏன் கூறவில்லை? இப்படியாக ஒரு விதண்டாவாதம். பதில் மிக எளிது: விசுவாசியாதவன் ஞானஸ்நானம் பெற விரும்புவானா? மார்க் 16:16ல் அவர் கூறுவது என்ன? ஒருவன் இரட்சிப்படைய விரும்பினால், அவன் விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ்நானம் பெற வேண்டும். ஒருவன் அழிந்து போக விரும்பினாலோ அவன் விசுவாசிக்கக் கூடத் தேவையில்லை என்றாலும் யாரும் அழிந்து போவதை அவர் விரும்பவில்லை. இரட்சிப்படைய ஒருவன் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதையே அவர் வலியுறுத்துகிறார். இதை அசட்டை செய்து வீணான வினா எழுப்பும் எவரும் தேவ சித்தத்தை எதிர்த்து நிற்கிறார்கள் என்றே பொருள்.

**தண்ணீர் எவ்வாறு இரட்சிக்கும்?** இது மற்றொரு வாதம். இரட்சிக்கும் வல்லமை தண்ணீருக்கு உண்டு என யார் கூறியது? தண்ணீர் யாரையும் இரட்சிப்பதில்லை. கிறிஸ்துவே இரட்சிக்கிறார். ஆனால் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோரையே அவர் இரட்சிக்கிறார். அவருடைய கட்டளைகளில் ஒன்று முழுகி ஞானஸ்நானம் பெறவேண்டுமென்பதாகும். நோவாவின் கீழ்ப்படிதலை நாம் ஒரு முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். தண்ணீர் அவரை இரட்சிக்கவில்லை. ஆனால் அவர் இரட்சிக்கப்பட்டது தண்ணீரால்! இரண்டுக்கும் வித்தியாசம் என்ன? வித்தியாசம் இதுதான்: தண்ணீர் அவரை இரட்சிக்கவில்லை; தேவனே அவரை இரட்சித்தார். தேவனுடைய கட்டளை

களுக்குக் கீழ்ப்படிந்து ஒரு பேழையை நோவா உருவாக்கி, தேவன் குறிப்பிட்ட காரியங்களைச் செய்து அதனுள் நுழைந்ததால் தேவன் அவரை இரட்சித்தார். துன்மார்க்கரை அழிக்க தண்ணீரைப் பயன்படுத்திய தேவன், அதே தண்ணீரில் பேழையை மிதக்கச் செய்து, நோவாவையும் அவரோடு பேழைக்குள்ளிருந்த சகலவற்றையும் இரட்சித்தார். ''என்னையும் என் குடும்பத்தாரையும் தண்ணீர் இரட்சிக்காது; எனவே பேழையை நான் ஏன் உருவாக்கவேண்டும்?'' என நோவா தேவனிடம் விவாதித்துக் கொண்டிருந்தால் அவன் முடிவு என்னவாயிருக்கும்? அவர்கள் அழிந்து போயிருப்பார்களே! ''தண்ணீர் இரட்சிக்காது; எனவே முழுக்கு ஞானஸ்நானம் எதற்கு''? என விவாதிப்போரின் நிலையும் அழிவுதானே?

**ஞானஸ்நானம் மட்டுமே இரட்சிப்பைத் தருமா**? இது ஒரு கேள்வி. ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது என பேதுரு(1 பேதுரு: 3:21) கூறிய போதிலும், ஞானஸ்நானம் மட்டுமே இரட்சிப்புக்குப் போதும் என அவர் கூறவில்லை. இரட்சிப்படைய தேவன் வகுத்த பல கட்டளைகளில் ஞானஸ்நானமும் ஒன்று. இரட்சிப்பு சம்பந்தமான **சகல** கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்தால் **மட்டுமே** இரட்சிப்பு உண்டு. விசுவாசம் **மட்டும்** இரட்சிப்பை தருவதில்லை; அல்லது, பாவங்களுக்காக மனஸ்தாபப்படுவது **மட்டும்** நம்மை இரட்சிக்காது; அதே போல, கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்வது **மட்டும்** இரட்சிப்புக்கு போதாது; அல்லது ஞானஸ்நானம் பெறுவது **மட்டும்** இரட்சிப்பைப் பெற்றுத் தராது. தேவன் குறிப்பிட்டது போல, மேற்கண்ட **சகல** கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்தால் மட்டுமே இரட்சிப்புண்டு. பிரச்சனை என்னவென்றால், மனிதன் மேற்சொன்ன கட்டளைகளில் ஒன்று, இரண்டைப் பற்றி மட்டுமே பேசி, அவையே போதும் என தானும் குழம்பி, பிறரையும் குழப்பிக் கொண்டிருக்கிறான். ஆனால் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தைப் படித்துப் பார்த்து, அவற்றில் கூறப்பட்ட பல மனந்திரும்புதல்களைக் கவனித்தால் அவர்கள் தேவனுடைய கட்டளைகள் யாவற்றுக்கும் எவ்வாறு கீழ்ப்படிந்து இரட்சிப்படைந்தனர் எனவும், அதன் விளைவாக சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளாக கிறிஸ்துவுக்குள் மாறினார்கள் எனவும் தெளிவாகக் காணலாம்.

ஞானஸ்நானம் இன்றி ஒருவர் இரட்சிப்பு அடைய இயலுமா? மார்க் 16:16; ரோமர் 6: 3,4; கலா 3: 26, 27; IIகொரி 5: 17; 1 கொரி 12:13. ஆகிய வசனங்கள் யாவும் இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியம் என்றல்லவோ கூறுகின்றன.

ஞானஸ்நானம் இல்லாமல் ஒருவர் மீண்டும் பிறக்க முடியுமா? உண்மையில், ஞானஸ்நானத்தின் விளைவாலேயே ஒருவன் மீண்டும் பிறக்கிறான். யோவான் 3: 3-5 வசனங்களில், ஒருவன் தண்ணீராலும் ஆவியாலும் மீண்டும் பிறக்க வேண்டும் என கிறிஸ்து கூறுகிறார். ஞானஸ்நானமின்றி ஒருவன் தண்ணீரால் பிறப்பது எவ்வாறு? ஒருவன் ஞானஸ்நானம் பெறும்போது தண்ணீரில் அடக்கம்செய்யப்பட்டு, வெளியேறுகையில் மீண்டும் பிறந்தவனாக மாறி புதுப்பிறவி எடுக்கிறான் (ரோமர் 6: 3,4; கொலோ 2:12) ஒருவன் ஞானஸ்நானம் பெற்றால் கிறிஸ்துவுக்குள் இருக்கிறான். கிறிஸ்துவுக்குள் இருப்பதால் அவன் புதுச் சிருஷ்டியாக இருக்கிறான். (2 கொரி 5: 17).

ஒருவன் இரு முறை அல்லது மீண்டுமாக ஞானஸ்நானம் பெறலாமா? ஒருவன் தண்ணீரில் மூழ்கி பலமுறை எழலாம். என்றாலும் வேதாகமப்படி ஒரே ஞானஸ்நானம் மட்டுமே உண்டு. (எபே. 4:4-6). அந்த ஞானஸ்நானம் பாவ மன்னிப்புக்கென்று தண்ணீரில் மூழ்கிப் பெறுவது; அதுவே, தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதாலும், அவருடைய அதிகாரத்தினாலும் அவனை கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் நிலைபெறச் செய்கிறது. (ரோமர் 6 : 3-4; அப். 8 : 26 - 39; அப். 2 : 38; கலா. 3:26, 27 ; 1 கொரி. 12:13 ; மத். 28:19,20). எனவே, இரண்டு தடவைகளோ அல்லது மீண்டுமாகவோ ஞானஸ்நானம் பெறுவது என்ற கேள்விக்கு இடமில்லை. இது மனிதனுடைய திரிந்த போதனையேயல்லாமல் வேதாகமம் இவ்வித எண்ணிக்கைகள் பற்றிக் கூறவில்லை. ஒருவர் வேதாகமத்தின்படி ஞானஸ்நானம் பெற்றதாக நிச்சயமாகத் தெரியாத பட்சத்தில், மீண்டுமாக தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறலாம். ஏற்கனவே எடுத்தது வேதாகமத்தின் பிரகாரம் என்றால் இரண்டாவதாகப் பெற்றது ஞானஸ்நானம் அல்ல; வெறும் முழுக்கு மட்டுமே. அதேபோல முதலில் பெற்றது வேதாகமத்தின்படி அல்லவெனில் அது ஞானஸ்நானம் அல்ல; வெறும் முழுக்கு மட்டுமே. இரண்டாவது பெற்றது தேவனுடைய திட்டத்தின்படி இருப்பதால் இதுவே ஞானஸ்நானம் ஆகும்.

ஒருவன் எப்பொழுது ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும்? தேவனை விசுவாசிக்கத்தக்க வயதுள்ளவனாகவும், **அவனுடைய** பாவங்களுக்காக மனஸ்தாபப்படும் அறிவுள்ளவனா-

கவும், இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என **தனது வாயால்** அறிக்கையிட அறிந்தவனாகவும், **தனது** பாவங்களுக்குப் பரிகாரமாக தண்ணீரில் மூழ்கி எழும் வயதுடையவனாகவும் இருத்தல் வேண்டும். (எபி. 11:6 ; அப். 17:30 ; மத். 10:32 ; ரோமர் 10:10; அப். 2:38) இரட்சிப்படைய விரும்பும் **ஒவ்வொருவரும்** அவசியம் செய்ய வேண்டிய காரியங்களாகும் இவை. ஒருவருக்குப்பதிலாக மற்றொருவர் செய்ய இயலாது.

ஞானஸ்நானம் பெறாமல் ஒருவர் மரித்தால் என்னவாகும்? உயிருள்ள மக்களைப்பற்றியே இங்கு நாம் பேசிக் கொண்டிருக்கிறோம் பகுத்தறியும் வயதுள்ள ஒவ்வொருவரும் தனது இரட்சிப்புக்காக விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டும் என தேவன் கூறுகிறார். (மார்க் 16:16) நியாயத்தீர்ப்பிலே தேவன் மரித்தோரை விசாரிப்பார்; அவர் நீதியுள்ள தேவனாயிற்றே! இவ்வுலகிலுள்ள நம்மைப் பொறுத்தவரை, யாரையும் நாம் மோட்சத்துக்கு அழைத்துச் செல்ல இயலாது. அதுபோலவே நரகத்திற்கும் அனுப்ப முடியாது. ஒரு நண்பரோ, உறவினரோ ஞானஸ்நானம் இன்றி மரித்துப் போனதைச் சுட்டிக்காட்டி, நாம் ஞானஸ்நானம் பெறத் தவறினாலும் தேவன் நம்மை இரட்சிப்பார் என எண்ணுவது பேதமையாகும். மரித்துப் போனவர்களை தேவன் விசாரித்துக் கொள்வார். ஆனால் நாமோ தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, ஞானஸ்நானம் பெற்று இரட்சிப்படையும் வழியைத் தேடுவோம்.

ஞானஸ்நானம் பற்றிய சில கேள்விகளுக்கு இங்கு நாம் கண்ட விடைகள் உங்களுக்குப் பயனுள்ளவையாக இருக்க வேண்டும் என்பதே எங்கள் ஜெபம். ஞானஸ்நானத்தைப்பற்றி நமது சொந்தக் கருத்துக்களைக்கூறி உங்களைக் குழப்பாமல் வேதாகமத்தில் தேவன் கட்டளையிட்டவைகளை மட்டும் நாம் கடைபிடித்தோமானால் எந்த பிரச்சனையும் இல்லை. தேவன் போதித்ததை மனிதன் மாற்ற ஆரம்பித்து, 'இதைச் செய் ; அதைச் செய்யாதே' என தன் சொந்த சரக்கை அவிழ்த்து விடும் போது தான் பிரச்சனையே உருவாகிறது. தயவு செய்து ஏமாறாதீர்கள். தேவன் கூறுவதைக் கேளுங்கள்; அவற்றையே கடை பிடியுங்கள். அப்போது தான் நீங்கள் சரியான பாதையில் நடக்க முடியும்; அப்போது தான் நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்.

**S. S. ராஜன்** **J. C. சோட்**

# கணவன்மார்களுக்கு ஓர் கவன ஈர்ப்பு

தேவன் மனுக்குலத்தைப் படைத்தபோது ஆணும் பெண்ணுமாய்ப் படைத்தார். அது முதல் இன்றுவரை உலகத்தின் மக்கள் தொகையைக் கவனித்துப் பார்ப்பீர்களேயாகில் சற்றேறக்குறைய ஐம்பது விழுக்காடு பெண்கள் இருப்பதைக் காணலாம். இது தற்செயலாய் நடந்து கொண்டிருக்கிறது என்று எண்ணி விடாதீர்கள். இது தேவனுடைய திட்டம் ஒரு ஆணுக்கு ஒரு பெண்.

தேவனால் கொடுக்கப்பட்ட வேதாகமத்தில் பெண்களுக்குச் சில கட்டுப்பாடுகளும், கீழ்ப்படிதலும் கட்டளையிடப்பட்டிருக்கிறது என்றாலும், உரிமைகள் என்று வரும்போது ''ஆணென்றும், பெண்ணென்றும், இல்லை'' என்று தெளிவாக்கியிருக்கிறது. (கலா 3:28) ஆகவே, பெண்ணுரிமையை நாம் மதித்து, பலவீனமான பாத்திரங்களாகிய அவர்களை அரவணைத்து ஊக்குவிப்போமாக!

**1. உங்கள் மனைவியை நேசியுங்கள்**

மனைவிகளுக்கு, ''**கணவன்மார்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்**'' என்று கட்டளை கொடுத்த பரிசுத்த ஆவியானவர், கணவர்களையும் சும்மா விட்டு விடவில்லை. கணவன்மார்களே, ''**உங்கள் மனைவியில் அன்புகூருங்கள்**'' என்றும் சொல்லியிருக்கிறார். (எபே 5:24,25)

மனைவியை நேசிக்காமல் என்ன? அதற்கென்று அவளைத் தலை மேல் தூக்கி வைத்துக்கொண்டு ஆட வேண்டுமா? எல்லாம் ஓரளவுக்குத் தான் என்று யாரோ முணுமுணுக்கிறார்கள். நம்முடைய அளவு இருக்கட்டும். பரிசுத்த ஆவியானவர் சொல்லியிருக்கிற அளவு என்ன என்று பாருங்கள். கிறிஸ்து சபையை நேசித்து, சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்தி மகிமையுள்ள சபையாக தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கு தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார். (எபே 5:26-27) அதாவது குறைவும், பலவீனமும், அசுத்தமும் நிறைந்த நிலையில் இருந்த சபையை ஏற்றுக்கொண்டு, அதைத் தமக்கு முன்பாக மகிமையுள்ள சபையாக நிலைநிறுத்த எல்லாவற்றிலும் பொறுமையால் தியாகம் செய்தார். அந்த அளவுகோலை வைத்து நானும் நீங்களும் மனைவியர் மீது எப்படிப்பட்ட அன்பு காட்ட வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுடைய குறைகளையும், தவறுகளையும் திருத்தி ஒழுங்குபடுத்தி நம் குடும்பத்துக்கேற்ற பண்பாடுகளை வளர்த்துக் கொள்ள வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

## உங்கள் மனைவியைப் புரிந்து கொள்ளுங்கள்

உங்கள் மனைவி கண்ணீர் விடும்போது கசந்து கொள்ளாதீர்கள். ஆணுக்கு அதிகாரம் எப்படியோ அப்படியே கண்ணீர் பெண்களுக்கு, நீங்கள் அதிகாரத்தினால் சாதிக்க விரும்புவதை அவள் கண்ணீரால் சாதிக்க விரும்புகிறாள். அவளுடைய ஒவ்வொரு துளி கண்ணீரும் ''என்னைப் புரிந்து கொள்ள ஒருவர் தேவை என்று சொல்லாமல் சொல்லுகிறது. எல்க்கானா—அன்னாள் தம்பதிகளை எடுத்துக் கொள்ளுங்கள் (1 சாமு 1-ம் அதிகாரம்) அன்னாள் தன் சக்களத்தியின் சுடு சொல்லால் மனமடிந்து அழுது கொண்டிருக்கிறாள். நானும் நீங்களுமாயிருந்தால், என்னடி, அழுமூஞ்சி, பொழுது போய் பொழுது விடிந்தால் ஒப்பாரி தானா? உன் தலை விதி அது, என் கழுத்தை ஏன் அறுத்துத் தொலைக்கிறாய்? போ, போயி நல்லா ஜெபம் பண்ணு. பென்னினாளோடே சண்டை போடாதே மனுஷனை நிம்மதியாக இருக்கவிடு என்று கத்தி வெந்து போயிருக்கிற அவள் மனதில் வேலைப் பாய்ச்சியிருப்போம். ஆனால் எல்க்கானா ஒரு அன்புள்ள கரிசனையுள்ள கணவன், அவள் உள்ளம் புண்பட்டிருப்பதைப் பார்த்து கூடுதல் அன்பு காட்டினான். அவளுக்கு இரட்டிப்பான பங்கு போட்டுக் கொடுப்பான் (21.4) அன்னாளே, ஏன் அழுகிறாய்? ஏன் சாப்பிடாதிருக்கிறாய்? ஏன் சஞ்சலப்படுகிறாய்? என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு அவள் துக்கத்துக்கான காரணம் என்ன என்று கண்டு பிடிக்க முயன்றான். (வ.8) அவன் குரலில் இருந்த கனிவு அவளுக்கு எவ்வளவு ஆறுதலாக இருந்திருக்கும் என்று சிந்தித்துப்பாருங்கள்.

ஒருவேளை அவன் அவளோடு கூட அமர்ந்து அவள் கண்ணீரைத் துடைத்து விட்டு அவளை உண்ண வைத்துத் தேற்றியிருப்பான் என்று கூட நினைக்கிறேன். பிரச்சனையை உடனடியாகத் தீர்க்க முடியாத நிலை. பெனின்னாள் பிள்ளை குட்டிக்காரி அவளைத் திட்டித் துரத்தி விடவும் முடியாது. ஆனால் ஒன்று செய்தான். அவள் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் செய்தான். இப்படி ஒரு கணவன் இருந்தால் அவன் சொன்னது போல் ''பத்துக் குமாரரிலும் மேல்'' தான் சந்தேகமில்லை.

ஆனால் அநேக கணவன்மார்கள் மனைவியரின் கண்ணீரைப் பற்றிக் கவலைப்படுவதே கிடையாது. அது அவள் பாடு, நான் என்ன செய்யமுடியும் என்று கண்டு கொள்ளாமல் நிற்காமல் கடிந்து பேசவும் செய்கிறார்கள் (ஆதி 30:2) கணவன்மார்களே உங்கள் கவனத்தை ஈர்க்கவே அந்தக் கண்ணீர்! புரிந்து கொள்ளுங்கள். சில சமயங்களில் அம்மா வீட்டிற்குப் போகிறேன் என்று திடீர் அறிவிப்பு வரும்.

உடனே ''செய்ய வேண்டியதைச் சீக்கிரமாய் செய்'' என்று மூட்டை முடிச்சுகளைக் கட்டி வழி அனுப்பி விட வேண்டாம். ''இவ்வளவு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஏன், என்ன என்று ஒரு வார்த்தை கேட்டீர்களா?'' என்பதைத் தான் பெண்கள் அப்படிச் சொல்லுவார்கள். உங்கள் மனைவியின் தேவைகளைத் யூகிக்க உணர்வுள்ளவர்களாயிருங்கள்.

## உங்கள் மனைவியில் திருப்தியாயிருங்கள்

உன் ஊற்றுக்கண் ஆசீர்வதிக்கப்படுவதாக உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு.

''அவளே நேசிக்கப்படத்தக்க பெண் மானும், அழகான வரையாடும் போல் போலிருப்பாளாக; அவளுடைய ஸ்தானங்களே எப்பொழுதும் உன்னைத் திருப்தி செய்வதாக. அவளுடைய நேசத்தால் நீ எப்பொழுதும் மயங்கியிருப்பாயாக'' (நீதி 5:18,19). என்கிறார் சாலமோன் ஞானி. கணவன்மார்களே உங்களுடைய மனைவியின் அறிவு, ஆற்றல், அழகு, சமையல், சுகம் எல்லாவற்றையும் திருப்தியடையுங்கள். கணவன் தன்னில் திருப்தியாயிருக்கிறார் என்பது அளவுக்குப் பெரிய தெம்பு. எங்க அம்மா சமையலுக்கு ஈடாகுமா? என்று சலிப்படையாதீர்கள். உங்கள் மனைவிக்கு உங்கள் தாயாரளவு அனுபவமில்லையாதலால் இருவரையும் ஒப்பிடுவது விவேகமாகாது. இவ்விதமான ஒப்புநோக்கும் தன்மை ''நான் எது செய்தால் தான் உங்களுக்குப் பிடிக்கப் போகிறது? என்று உங்கள் மனைவியைச் சோர்வடையச் செய்து விடும்''.

## உங்கள் மனைவியைப் பாராட்டுங்கள்

உங்கள் மனைவியைக் கடைசியாகப் பாராட்டினது எப்போ? பாராட்ட ஒன்றுமில்லையே என்கிறீர்களா? ஒரு குருவும் அவருடைய சீடர்களும் வழிப் பயணம் போய்க் கொண்டிருந்தார்களாம் அங்கே ஒரு நாய் செத்துக் கிடந்தது. ஒரே துர்நாற்றம் எல்லாரும் பல விதமாக தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டுக் கொண்டே மூக்கைப் பிடித்துக் கொண்டு வழி நடந்தார்களாம். ஆனால் குரு அந்த நாயின் பற்களின் அழகை இரசித்து அந்த நாயின் பற்கள் எவ்வளவு வெளுமையாக இருக்கிறது பாருங்கள் என்றாராம். அதாவது பாராட்ட வேண்டும் என்றால் பாராட்டுவதற்கு எத்தனையே உண்டு உங்கள் மனைவி அன்றாடம் பெருமுயற்சி எடுத்துச் சமைத்துத் தரும் பண்டங்களைச் சாப்பிடுகிறீர்கள். ஆனால் ஒரே ஒரு நாள் உப்பு கொஞ்சம் குறைவாகி விட்டாலோ அல்லது காரம் கொஞ்சம் அதிகமாகி விட்டாலோ என்னமாய்

சீறி விழுகிறீர்கள். ஆனால் பல நாட்கள் எல்லாம் சரியாக ருசியாக இருக்கும் நேரங்களில் வாய் திறந்து பாராட்டியிருக்கிறீர்களா? இன்று குழம்பு பிரமாதம்! என்று சொல்வதால் உங்கள் வாய் முத்து உதிர்ந்து விடுவதில்லை. ஆனால் அந்தக் கேட்ட உங்கள் மனைவியின் முகத்தில் தவழும் புன்னகைக்கு விலை மதிப்பேது! 'சொல்லாத நன்றி' ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மனைவியின் அழகையும், சமையலையும், வீட்டு வேலைகளையும் வெளிப்பட மெச்சி அதன் விளைவைக் கவனித்துப் பாருங்கள்.

**உங்கள் மனைவியின் தவறுகளைச் சகித்துக் கொள்ளுங்கள்:—**

மனைவியின் குறைகள் திருமணத்துக்குப் பிறகு தான் உங்களுக்குத் தெரியவரும். உடனே அவளைக் கண்டனம் செய்து, குத்திக்காட்டி அவளை மனமுடையச் செய்யாதீர்கள். உங்கள் முன்மாதிரியினாலும் அன்பான புத்திமதியினாலும் அவளுடைய குறைகளை மேற் கொள்ள உதவி செய்யுங்கள். நாமும் குறையுள்ளவர்கள் தானே புசிக்க வேண்டாம் என்று தேவன் விலக்கி வைத்த கனியின் மேல் ஆசை வைத்ததினால் ஏவாளுடைய 'பெருந்திண்டிக்குணம்' ஆதாமுக்கும் மனுக்குலத்துக்கும் எவ்வளவு பெரிய நஷ்டத்தைக் கொண்டு வந்தது என்பது நாம் அறிந்ததே. ஆயினும் அதற்குப் பின்னும் ஆதாம் ஏவாளுடன் தொளாயிரம் ஆண்டுகளாவது வாழ்க்கை நடத்தினானரே அப்படி அவள் புத்தியீனமாய் நடந்து கொண்டதற்காக அவளை ''சாவாள்'' என்று பெயர் மாற்றி பாவிகளுக்கெல்லாம் தாய் என்று பட்டம் சூட்டவில்லையே மாறாக, **'ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய்'** என்று அமைத்துக் கனப்படுத்தினானே (ஆதி 3:20)

உங்கள் மனைவியின் புத்தியீனங்களுக்காகவும், தவறுதலுக்காகவும் தேவனைத் துதியுங்கள் தேவன் பெண்களையும் ஆண்கள் அளவுக்கு சாமர்த்தியசாலிகளாகவும், விவேகிகளாகவும் படைத்திருந்தால் உங்களை அவர்களுக்குத் தலைவனாக்கியிருக்க முடியாதே. ஆண்வர்க்கம் குடும்பத்தலைவனாகவும் தகுதி பெற்றது; பெண் இனத்தின் பலவீனத்தினாலும் மென்மையினாலும் தானே?

**உங்கள் மனைவிகளோடு நேரம் செலவிடுங்கள்:**

உங்கள் மனைவியோடு போதுமான நேரம் செலவிடாததினால் திருமணத்தன்று நடப்பட்ட அன்பெனும் நாற்று வீட்டின் வெப்ப நிலையால் வாடிப் போயிருக்கலாம். அதற்கு அன்பு என்னும் நீர்ப்பாய்ச்சி அதை உயிர்ப்பிக்க முற்படுங்கள். பொதுவாகக்

கணவன்மார்கள் மனைவிக்குத் தேவையான காரியங்களை மட்டுமே பகிர்ந்து கொள்கின்றனர். ஆனால் மனைவிமார்கள் அப்படியல்ல ஆசை தீரக் கதை பேசி மகிழ, நீங்கள் வீடு திரும்பும் வேலைக்காகப் வழிமேல் விழி வைத்துக் காத்துக் கிடப்பார்கள். நீங்கள் ஆபீஸ்களிலும் வெளியிலும் கண்டவைகளையும், செய்தவைகளையும் சொல்லக் கேட்டு, புரிகிறதோ இல்லையோ ரசித்து மகிழ்வார்கள். உன்னதப்பாட்டின் சுதாநயாகி சொல்வதை வாசித்துப் பெண்களின் மனதைப் புரிந்து கொள்ளுங்கள் (உன் 2:10-14) பெண்ணினம் கணவன்மார்களின் அன்பையும் அரவணைப்பையும் அதிகம் நாடுகிறார்கள். நீங்கள் உங்கள் மனைவிகளை எப்படி ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களோ தெரியாது. ஆனால் தேவன் அவளை உங்களுக்குத் தந்துள்ளது தோழியாகவே (மல்கியா 2:14) (ஆதி 2:18) **''வாரும் என் நேசரே வயல் வெளியில் போய் கிராமங்களில் தங்குவோம்''** (உன் 7:11) என்ற அழைப்பினுள் அடங்கியிருக்கும் உள்ளர்த்தம் உங்களுக்குப் புரிகிறதா?

## உங்கள் மனைவியை உற்சாகப்படுத்துங்கள் :

உங்கள் மனைவி எதிராளி அல்ல; கூட்டாளி. உற்சாகப்படுத்தி ஒரு வார்த்தை சொல்லி விட்டால், தன்நிலையில் சிறந்து விளங்குவதுமட்டும் அல்லாமல் தன்னால் முடியாது என்று தள்ளினவைகளைக் கூட தன்னார்வமாய்ச் செய்து முடிப்பாள். கண்டனம் கொல்லும். உற்சாக மூட்டுதல் விதையை ஊன்றி நாற்றுக்கு நீர் பாய்ச்சும்.

பெண்கள் வெறுமனே சமைத்துப் போடவும், பிள்ளை பெறவும் படைக்கப் பட்டவர்கள் அல்ல, அவர்களுக்கும் குடும்ப வாழ்க்கையில் ஐம்பது சதவிகிதக் கூட்டு உண்டு. நீங்கள் எவ்வளவு தான் அதிசயப் பிறவிகளாக இருந்தாலும் தேவன் உங்கள் கையில் கொடுத்திருப்பது ஐம்பது சதவிகிதம் மட்டுமே. அடுத்த ஐம்பது சதவிகிதம் பெண்கள் கையில் புரிகிறதா குடும்பம் என்பது கூட்டாட்சி குழந்தை பெறவும், பாலூட்டிச் சீராட்டவும் பெண்களையே தேவன் ஏற்படுத்தியிருக்கிறார், மனைவி புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள் (1 கொரி 11:7) அவளுக்குக் கை கொடுத்துத் தூக்கி விட்டால் உங்கள் கிரீடமாயிருப்பாள். (நீதி 12:4)

## உங்கள் மனைவிக்கு உதவி செய்யுங்கள்

அம்மி அரைப்பதும், அடுப்பு எரிப்பதும் பெண்களின் வேலை தானே என்பது, கடந்த நூற்றாண்டு வரை சரியாக இருந்திருக்-

கலாம். இன்று சமுதாயச் சூழலில் பெரிதும் மாறிவிட்டது. பெண்களும் தற்காலத்தில் அலுவலகங்களுக்கும் வேறு வேலைகளுக்கும் போக வேண்டியிருக்கிறது. அதற்கேற்ப நாமும் மாறிக் கொள்ள வேண்டாமா? விடுமுறை நாட்களிலும், விருந்தினர்கள் வருகை தரும் விசேஷ நாட்களிலும் நம்மால் இயன்ற சிறுசிறு வேலைகளைச் செய்து மனைவியின் பாரத்தைக் கொஞ்சம் குறைக்க முயற்சிக்கலாமே. அதனால் உங்கள் அந்தஸ்து குறைந்து விடப் போவதில்லை. நீங்கள் இரண்டு வெங்காயம் நறுக்கித் தருவதாலோ, ஒரு மூடி தேங்காயைத் துருவித்தருவதாலோ பெரிய அளவு வேலைப்பளு குறைந்து விடுவதில்லை. ஆனால் உதவ வேண்டும் என்ற உங்கள் நல்லெண்ணம், உங்கள் அக்கரை மனைவிக்குப் பெரிய ஆறுதலைத் தரும் என்பதை மறவாதீர்கள்.

அநேக கணவன்மார்கள் பிள்ளைகளைத் தூக்குவதற்கே விரும்புவதில்லை. குழந்தை அழுதால் மனைவி என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் சரி, அவள் தான் வந்து தூக்க வேண்டும். கணவன்மாரே! உங்களுக்கு ஒரு உண்மை தெரியுமா? வேதத்தின்படி பிள்ளைகளைச்சுமக்க வேண்டிய பொறுப்பு தகப்பன் மார்களுக்குத் தான், என் மீது கல் எறியாதீர்கள். நீங்களே வாசித்துப் பாருங்கள் (எண் 11:12; உபா 1:31) ஆகவே குடும்ப பாரத்தைப் பகிர்ந்து கொண்டு, உங்கள் மனைவியையும் வாழ விடுங்கள்.

**உங்கள் மனைவிக்கு அவ்வப்போது வெகுமதி அளியுங்கள் :**

வெகுமதி என்றதும் பயந்து விடாதீர்கள். அது ஐம்பது பைசா பூவாக இருக்கலாம். ஐந்நூறு ரூபாய் புடவையாகவும் இருக்கலாம். ஆனால் அதில் சூழ்ந்து நிற்கிற அன்பே முக்கியம். உங்கள் மனைவி என்ன ஏழு திருப்பாக்கடலுக்கு அப்பால் உள்ள ஒரு செங்குத்தான குன்றின் உச்சியில் உள்ள புதருக்குள் இருக்கும் கருவண்டின் ஈரலையா கேட்டு விடப் போகிறாள்? என்றாவது தெரு முனையில் விற்கும் ஒரு முழம் மல்லியோ எதை எடுத்தாலும் எழுபத்தி ஐந்து பைசா வண்டியில் விற்கப்படும் ஒரு மயிர் மாட்டியோ தானே! கணவர் நெஞ்சில் நமக்கு ஓர் இடம் உண்டு என்ற நிச்சயம் அவளைப் பூரிப்பில் விம்மி வெடித்து விடச் செய்யாதா? முயன்று பாருங்கள்.

**உங்கள் மனைவியை மதியுங்கள்–மிதிக்காதீர்கள்**

அநேக குடும்பங்களில் மனைவி வேலை செய்யும் இயந்திரம் தான். அவளுக்கு என்று ஒரு கருத்தோ' அவளுக்கு என்று ஆசையோ

இருக்கும் என்ற உணர்வே கணவனுக்கு உண்டாவதில்லை. மனைவியின் ஆலோசனைக்கு எப்போதுமே செவியை அடைத்துக் கொள்ளாதீர்கள். மனைவியின் ஆலோசனையைக் கேட்டால் ஆதாம் கதிதான் என்று அஞ்சாதீர்கள். எல்லா மனைவிகளுமே ஏவாள்-கள் அல்ல; சாராள் போன்ற நற்குணசாலிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். மனைவியை மதித்து அவள் கூறும் நல் ஆலோச-னைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். தேவன் ஆபிரகாமை நோக்கி, **''சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள்''** என்றாரே. (ஆதி 21:12) இன்னும் சொல்லப் போனால், சில வேளைகளில் ஆண்களைவிட பெண்களிடமே தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்துகிறார். இதியோனின் தந்தை மனோவா ஊக்கமாய் ஜெபம் பண்ணியும், (நியாய 13:8) இரண்டு முறையும் தேவதூதன் அவனது மனைவிக்கே தன்னை வெளிப்படுத்தினான்.

(நியாய 13:3, 9)

ஆதலால் கணவன்மாரே, வீட்டின் காரியங்களை இருவருமே கலந்து ஆலோசித்துத் தீர்மானியுங்கள். எல்லாக் காரியங்களிலும் அவளது அபிப்பிராயத்தைக் கேட்பதினால் குடும்பத்தில் சுமுக-மான சூழ்நிலையை உருவாக்குங்கள்.

**உங்கள் மனைவியைப் பற்றிப் பிறரிடம் தாழ்வாகப் பேசாதீர்கள்.**

உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில், மனைவியைக் குறைத்துப் பேசி அவளைச் சிணுங்க வைப்பதில் சிலருக்கு அலாதிப் பிரியம். அந்நேரத்தில் அவர்கள் கோலற்ற கொடியாய்த் துவண்டு முகம் சோர்ந்து நிற்பதை என்றாவது கவனித்துப் பார்த்திருக்-கிறீர்களா? அவர்கள் குறைவுள்ளவர்களாகவே கூட இருக்கலாம். ஆனால் நீங்கள் தானே அவர்கள் ஊன்றுகோல். இதை ''பளிச்'' சென்று விளக்க ஒரு கிராமப்புறப் பழமொழி சொல்லுவார்கள். ''வூட்டுப் புருஷன் ஊளை முண்டை என்று சொன்னால், பிச்சைக்கு வந்தவன் பேய் முண்டை'' என்று சொல்வானாம். எவ்வளவு உண்மை. நீங்கள் அப்படிக் குறைத்துப் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கும், உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் உங்கள் மனைவி மீது எப்படிப்பட்ட அபிப்பிராயம் ஏற்படும்! அவர்கள் மீது அன்பு பாராட்டவும், தொண்டு செய்யவும் எப்படி மனம் வரும்? மாறாக, அவள் காது கேட்க நாலு வார்த்தை அவளைப் புகழ்ந்து பேசிப் பாருங்கள். பம்பரமாய் சுழன்று, இயற்கையாகவே, குறை-வுள்ளவளாக இருந்தாலும் திருந்தி நண்பர்கள், உறவினர்களுக்கு மத்தியில் உங்கள் கௌரவத்தைச் செந்தூக்காய்த் தூக்கி விடுவாளே.

இன்னொன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஆயிரம்தான் குறைகள் இருக்கட்டுமே! உங்கள் மனைவியின் இடத்தை வேறு எவராலும் நிரப்ப முடியாது. அவள் இல்லாவிட்டால் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. இது சிலருக்குத் தெரியும். ஆனால் அவளிடம் சொன்னால் தலைமேல் ஏறி உட்காரப் பார்ப்பாள் என்று தவறாக எண்ணிக் கொண்டு மௌனமாக இருப்பார்கள். அப்படி நினைக்காமல், உங்களுக்கு அவள் எவ்வளவு இன்றியமையாதவள் என்று அடிக்கடி சொல்லுங்கள். அவள் எங்காவது இரண்டொரு நாள் வெளியூர் சென்று விட்டுத் திரும்பி வந்தால், அவள் இல்லாத குறையை எவ்வளவாய், உணர்ந்தீர்கள் என்று வந்ததும் வராததுமாகச் சொல்லுங்கள். தனக்கு இவ்வளவு சிறப்பு இருக்கிறதா என்று பூரித்துப் போவாள்.

### உங்களுக்கும், உங்கள் மனைவிக்குமிடையே உங்கள் பெற்றோர்களோ உறவினர்களோ குறுக்கிட அனுமதியாதீர்கள்

உங்கள் பெற்றோரோ, உறவினர்களோ உங்களுக்கும், உங்கள் மனைவிக்கும் மூன்றாமவரே, மூவர் ''ஒரே மாமிசமாக'' முடியாது. மனைவியும் கணவனுமே ''ஒரே மாமிசம்'' தேவன் தம்முடைய அனாதி ஞானத்தின்படியே ஒரு தகப்பனோ, ஒரு தாயோ, மாமனாரோ, மாமியாரோ, உருவாகுமுன்னே பிரிவினை கட்டளையைப் பிறப்பித்தார். ''**இதினிமித்தம், புருஷன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாமிசமாயிருப்பார்கள்.** ஆதி 2:24; மத் 19:5) அதனால் பெற்றோரைக், கனம் பண்ணவோ உறவினர்களை நேசிக்கவோ கூடாது என்றல்ல. கனம் பண்ணுங்கள் நேசியுங்கள் விடுங்கள்.

இந்தியா போன்ற நாடுகளில் தேவன் அங்கீகரிக்காத கூட்டுக் குடும்ப முறைகளால் ஏற்படும் கொடுமைகள், சீரழிந்த குடும்பங்கள் பற்றிச் செய்தித் தாள்களில் வாசித்த வண்ணம் இருக்கிறோம். தேவன் நமக்குத் தெளிவான உறவுமுறைகளை வகுத்து அளித்திருக்கிறார். யார்யாருக்கு எந்த இடம் என்பதை நிர்ணயித்து ஒதுக்கீடு செய்து படியுங்கள்.

### உங்கள் மனைவியின் பெற்றோர்களை, உறவினர்களை வெறுக்காதீர்கள்

உங்கள் மனைவி வெறும் இயந்திரம் அல்ல. உங்கள் கொத்தடிமைகளும் அல்ல தேவன் அவளை உங்கள் விலா எலும்பிலிருந்து

எடுத்ததன் மூலம் அவளும் உங்களுக்குச் சமம் ஆனவள் என்பதை உணர்த்தியிருக்கிறார். அவளுக்கும் உங்களுக்கு இருப்பதைப் போன்ற பாச உணர்வுகள் உண்டு. அவள் திடீரென்று பெய்த மழை வெள்ளத்தில் பருவ மங்கையாக அடித்து வரப்பட்டு அவளுடைய பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டவள் அல்ல. அவளைப் பெற்று பாலூட்டி, சீராட்டி, வளர்த்து, வாலிபமாக்கி, படிக்க வைத்து, பாடவைத்துப் பருவ மங்கையான பிறகு உங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார். கடந்த இருபது இருபத்திஐந்து ஆண்டுகளாக ஒன்றாய் உண்டு ஒருமிக்க வளர்ந்த சகோதர சகோதரிகளையும் பெற்றோரையும் ஒரு நொடியில் உதறித் தள்ளிவிட முடியாது. என்பதை கணவன்மார்கள் உணர வேண்டும்.

மேலும் உங்கள் மனைவி உங்கள் பெற்றோரை நேசிக்க வேண்டும், கனப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். அதையே நீங்களும் செய்ய வேண்டாமா? பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இதற்குச் சிறந்த முன் உதாரணங்கள் உண்டே. மெத்தப்படித்த மோசே, தன் மாமனாராகிய எத்திரோவின் ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி நடந்தான். (ஆதி 18;19-24) பேதுருவின் மாமியாரின் ஜீரத்தைப் போக்க இயேசு விரைந்து வந்தது அது அவனுடைய மாமியார் என்பதால் தானே. (மாற்-1:30) ஆகவே, உங்கள் மனைவியினித்தம் அவளுடைய பெற்றோரை நேசிப்பதும் கனப்படுத்துவதும் நியாயம்.

**E. Z. செல்வநாயகம்**

---

**உருவத்துக்கும் ஞானத்துக்கும் சம்பந்தம் இல்லை**

பூமியில் சிறியவைகளாயிருந்தும் மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு.

அவையாவன: அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடைகாலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பும் சத்துவமற்ற ஜெந்துவாயிருந்தும் தங்கள் வீட்டைக் கன்மலையிலே தோண்டி வைக்கும் குழி முசல்களும், ராஜா இல்லாதிருந்தும் பவுஞ்சு பவுஞ்சாய்ப் புறப்படுகிற வெட்டுக்கிளிகளும் தன் கைகளினால் வலையைப் பின்னி அரசர் அரமனைகளிலிருக்கிற சிலந்திப் பூச்சியுமே. நீதி 30:24-28.

# மரணம் என்றால் என்ன?

உலகத்தில் பிறக்கிற ஒவ்வொரு மனிதனும், ஏன் உயிரினங்கள் அனைத்துமே மரணத்தைத் தழுவுகின்றன. இப்படி அனைத்து ஜீவ ராசிகளையும் ஆட்கொள்ளுகிற மரணத்தைப்பற்றி மக்களிடையே ஏகோபித்த கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. பலர் பலவிதமான கருத்துக்களைத் தங்களுக்குத் தோன்றிய முறையில் எண்ணிக் கொண்டும், அதை மற்றவர்களுக்கு சொல்லிக் கொண்டும் இருக்கிறார்கள். ஒரு சிலர் சரீரமரணத்தோடு, அதாவது ஒரு மனிதனின் சுடுகாட்டுப்பயணத்தோடு அவனுடைய கதை முடிந்து விடுகிறது. அதற்கு மேல் ஒன்றுமில்லை என்கின்றனர். ஒரு நாய் அல்லது ஒரு மிருகம் அல்லது உயிர் இனங்கள் ஆகியவைகளுக்கு என்ன கதியோ அது தான் மனிதனுக்கும். வேறு ஒரு வித்தியாசமும் கிடையாது. அவன் மரித்த பிறகு அவனுக்கு ஞாபக சக்தியில்லை. மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டவைகளில் மானிடனும் அடக்கம். ஆகவே அவனும் மண்ணுக்குத் திரும்பி மண்ணோடு கலந்து விடுகிறான் என்பர். அதற்கு வேதாகமத்திலிருந்து பிர. 3:19,20 ஆகிய வசனங்களையும் ஆதாரமாகக் காட்டுவார்கள். ஆனால் அது ஓர் அவசரமான, தவறான முடிவு. ஏனெனில் அதற்குக் கீழே உள்ள வசனமே மனிதனுடைய ஆவி போகிற இடமும், மிருகங்களின் ஆவி போகிற இடமும் வெவ்வேறானது. என்று பிரித்துக் காட்டுகிறது (2:21) அதை 12:7 உறுதி செய்கிறது.

மேலும் அதே அதிகாரம் வசனம் 17ஐ வாசிப்போம். **சகல எண்ணங்களையும், சகல செயல்களையும் நியாயந் தீர்க்கும் காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும், துன்மார்க்கனையும், தேவன் நியாயந்தீர்ப்பார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன்.** என்றும் காரியத்தின் கடைத் தொகைக் கருத்துக்களைத் தாங்கி நிற்கும் வசனங்களாகிய 12:13,14 வசனங்களையும் வாசியுங்கள்'' **தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக் கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்''** என்றும் கூறுகிறது. மனிதனுக்கும் மிருகத்துக்கும் வித்தியாசம் இல்லை என்ற கூற்று உண்மையெனில் மிருகங்கள் கற்பனைகளைக் கைக்கொள்ளும் என்று எதிர்பார்க்கலாமா? எல்லா **மனுஷர்**

மேலும் விழுந்த கடமை என்று தான் கூறுகிறதேயல்லாமல் எல்லா **உயிர்கள்** மேலும் விழுந்த கடமை என்று சொல்லவில்லையே.

மேலும் பிர 3:17ன்படி தேவன் யாரை நியாயம் தீர்ப்பார்? எப்பொழுது நியாயம் தீர்ப்பார்? என்று கூறுகிறது? சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் என்றும், நியாயம் தீர்க்கும் காலம் இனி (எதிர்காலம்) இருக்கிறபடியால் என்றும் கூறுகிறதே. இதில் மனிதன் தவிர மற்ற உயிரினங்களுக்கு எங்கே இடம்? நன்மை செய்யவும், தீமை செய்யவும் மனிதன் தவிர மற்ற ஜீவராசிகளுக்கு தெரிவு செய்யும் பகுத்தறிவு இல்லையே. இவைகளெல்லாம் நமக்கு உணர்த்தும் உண்மை என்ன? மற்ற ஜீவராசிகளின் நிலைமையை விட மனிதனுடைய நிலை வித்தியாசமானது; உயர்ந்தது என்பது தானே.

இயேசு கிறிஸ்து வாழ்ந்த நாட்களில் யூதர்களுக்குள்ளே சதுசேயர் என்று ஒரு பிரிவினர் இருந்தனர். அவர்கள் உயிர்த்தெழுதல் இல்லை என்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறவர்கள் (அப் 23:8) அவர்கள் ஒரு சமயம் இயேசுவினிடத்தில் ஒரு விசித்திர வழக்கைச் சொல்லி அதற்குத் தீர்ப்புக் கூற வேண்டும் என்று கேட்டார்கள். ஒரு பெண் தன் வாழ்நாளில் ஒருவர் பின் ஒருவராக ஏழு பேரைத் திருமணம் செய்து கொண்டாள். அவளும், அவர்களும் மரித்துப் போனார்கள். உயிர்த்தெழுதலில் அவள் யாருக்கு மனைவியாக இருப்பாள். ஏழு பேரும் அவளுக்குக் கணவனாக இருந்தார்களே என்பது தான் அந்த வழக்கு (மத் 22-23-33) அதற்கு இயேசு கிறிஸ்து சொன்ன பதில் என்ன?'' நீங்கள் வேத வாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங் கொள்ளுகிறீர்கள்.

உயிர்த்தெழுதலில் கொள்வனையும், கொடுப்பனையும் இல்லை, அவர்கள் பரலோகத்தில் தேவதூதரைப் போல் இருப்பார்கள் (வ. 29, 30) என்று கூறிவிட்டு அவர்களும் ஏற்றுக் கொள்ளுகிற மோசேயின் பிரமாணத்திலிருந்து ஒரு மேற்கோள் காட்டினார். ''நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் (வ. 31; யாத் 3:6)

மோசேயிடம் தேவன் இப்படிப் பேசினபோது, ஆபிரகாமும், ஈசாக்கும் யாக்கோபும் மரணம் அடைந்து பல ஆண்டுகளாகி விட்டன. ஆயினும் அப்பொழுது அவர்கள் உயிரோடிருப்பதைப் போல் நிகழ் காலத்தில் (இருக்கிறேன்) சொல்லியிருக்கிறார். மேலும் அடுத்த வசனத்தில் இயேசு ''தேவன் மரித்தோருக்கு

தேவனாயிராமல் ஜீவனுள்ளோருக்கு தேவனாயிருக்கிறார்'' என்று விளக்குகிறார் (வ. 32). அதாவது அவர்கள் தேவன் மோசேயோடு பேசினபொழுது மட்டுமல்ல, இப்போதும் கூட உயிரோடே இருக்கிறார்கள்; அவர்கள் சரீரம் மட்டுமே அழிந்து விட்டது. அவர்கள் சரீரம் மட்டுமல்ல; இதுவரை மரித்துப் போன அனைவருடைய நிலையும் அப்படியே. இயேசு வேறு ஒரு இடத்தில், அவர் **மரித்தோரின் தேவனாயிராமல் ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார்; எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே''** என்கிறார் (லூக் 20:38) மேற் சொன்னவைகளிலிருந்து இயேசு கிறிஸ்து சொல்ல விரும்புகிற உண்மை என்னவெனில்'' தேவன் உயிருள்ளோருக்கே தேவனாயிருக்கிறார்; ஆவி சரீரத்துக்குள் இருந்தாலும், சரீரத்துக்குப் புறம்பே இருந்தாலும் அவரைப் பொறுத்த வரையில் எல்லோரும் பிழைத்திருக்கிறார்கள் என்பதாகும்.

ஆகவே உலகியல் கோட்பாட்டுக்காரர்களின் கருத்தும், சதுசேயர்களுடைய கருத்தும் - அதாவது மரணத்தோடு மனிதனின் வாழ்க்கை அஸ்தமித்து விடுகிறது என்கிற கூற்று, மரணத்தைப் பற்றி வேதாகமம் கூறுகிற கருத்துக்கு முரண்பாடாக இருக்கிறது. மரணம் என்ற சொல் நிஜமாகவோ அல்லது உருவகமாகவோ எப்படிச் சொல்லியிருந்த போதிலும், அது மனிதனுடைய சரீரத்தை விட்டு தேவன் தந்த ஆவி பிரிதலையே குறிக்கிறது. மனிதனின் அழிவை அல்ல.

வேதாகமம் சரீர மரணம் அல்லாத வேறு இரண்டு மரணங்களையும் குறிப்பிடுகிறது அவைகள் ஆவிக்குரிய மரணம், நித்திய மரணம். அவைகளைப்பற்றி வேறொரு சமயத்தில் பார்ப்போம். இக்கட்டுரையில் சரீர மரணத்தைப்பற்றி மட்டும் பார்ப்போம்.

**இவ்விதமாய் மண்ணானது தான் முன்பிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும்** (பிர 12:7) என்றும் . . **நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்** (ஆதி 3:19) என்றும் சொல்வதின் மூலம் சரீரம் மண்; ஆகையால் அது மண்ணுக்குத் திரும்புகிறது ஆவி தேவனிடத்தில் இருந்து வந்தது (ஆதி 2:7) ஆகவே அது தேவனிடத்துக்குத் திரும்பிப் போகிறது.

அப்போஸ்தலன் யாக்கோபு, **ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது** என்கிறார் (யாக் 2:26) சரீரமில்லாத ஆவி செத்தது என்று கூறாமல் ஆவியில்லாத சரீரம் செத்தது

என்கிறதைக் கவனியுங்கள். அவரும் சரீரத்திலிருந்து ஆவி பிரி-வதையே மரணம் என்று கூறுகிறார். பழைய ஏற்பாட்டில் ராகேலுடைய மரணத்தைக் குறிப்பிடும் போது **அவள் ஆத்துமா** பிரிந்தது என்கிறது (ஆதி 35:18) ஆபிரகாம் மரித்ததைக் குறித்து **''பிராணன் போய் மரித்து''** என்று கூறுகிறது (ஆதி 25:8) இயேசு சிலுவையில் மரிக்கும் தருவாயில், **''பிதாவே, உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார். இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார்** (லூக் 23:46) முற்பிதா ஈசாக்கு மரணத்தைக் குறிப்பிடும் போதும் **பிராணன் போய் மரித்து''** என்று சொல்லப்பட்டிருக்கிறது (ஆதி 35:29) அதே போல யாக்கோபின் மரணத்தைப் பற்றிச் சொல்லும்போது, **ஜீவித்துப் போய்** என்கிறது. (ஆதி 49:33)

அனனியாவின் மரணத்தையும் அவன் மனைவி சப்பீராளின் மரணத்தையும் குறிப்பிடும்போது, ஜீவனை விட்டனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது (அப் 5:5,10) ஸ்தேவான் கல்லெறியுண்டு மரிக்கும்போது கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்கிறார் (அப் 7-59) சங்கீதக்காரன், மரணத்தின் போது ஆவி சரீரத்தை விட்டு பறவையைப் போல பறந்து போகிறது என்கிறான். (சங் 90-10) நாங்களும் பறந்து போகிறோம் என்ற சொற்றொடர் ஆவியையே குறிக்கிறது; சரீரத்தையும் சேர்த்து அல்ல, மேற்சொன்ன வசனங்களின் கருத்தைத் திரட்டிப் பார்க்கும் போது மரணம் என்பது சரீரத்தில் வாசமாயிருக்கிற ஆவி, உலகத்தை விட்டு எடுபட்டுப் போவதைக் குறிக்கிறது என்று 'அறியலாம்.''

அப்போஸ்தலனாகிய பவுல் மரணம் அடைய விரும்புகிறதை தேகத்தை விட்டுப்பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு என்று கூறுகிறார். (பிலி 1:23). சிமியோன் தான் மரணம் அடையும் தருவாயில் ''அடியேனை சமாதானத்தோடே போக விடுகிறீர்'' என்கிறார் (லூக் 2:26,29) பவுல் வேறு ஒரு இடத்தில் ''நான் தேகத்தை விட்டு பிரியும் காலம் வந்தது என்கிறார்'' (2 தீமோ 4:6)

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் கூடாரத்தை விட்டுப் போவது சீக்-கிரத்தில் நேரிடுமென்று அறிந்து இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பி விடுவது நியாயம் என்று எண்ணுகிறேன்''** என்று பேதுரு கூறுவதின் பொருள் என்ன? (2 பேது 1:13-15)

உள்ளான மனுஷன் (உயிர்) தங்கும் வாசஸ்தலமாக சரீரம் இருக்கிறது என்றும் கூடாரத்தை விட்டுப் போவது என்பது மரணத்தையும் குறிக்கிறதல்லவா?

**பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத நித்திய வீடு பரலோகத்தில் நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்** என்றும் (2 கொரி 5:1) அதே அதிகாரம் 4-8 வசனங்களில் **இந்தக் கூடாரத்தில் என்றும், 'இந்த தேகத்தில் குடியிருக்கையில், 'இந்த தேகத்தை விட்டு குடிபோகவும்'** என்ற சொற்றொடர்களின் பொருளை நாம் கவனித்துப் பார்த்தால் ஜீவன் என்பது சரீரமும் உயிரும் இணைந்தது என்றும் மரணம் என்பது சரீரமும் ஜீவனும் பிரிந்த நிலை என்றும் ஆகிறது.

வேதாகமம் கூறுகிற மரித்தோர் மீண்டும் உயிர் பெறுகிற அற்புதங்கள் பிரிந்து போன ஆவியை மீண்டும் சரீரத்துக்குள் கொண்டு வருவதையே குறிக்கிறது. சாரிபாத் ஊர் விதவையின் மகனை மீண்டும் உயிரடையச் செய்வதற்காக எலியா தீர்க்கன் கீழ்க்கண்ட வாசகங்களைச் சொல்லி ஜெபிக்கிறான்,

**''என் தேவனாகிய கர்த்தாவே, இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பி வரப் பண்ணும் என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்டார். பிள்ளையினுடைய ஆத்துமா அவனுக்குள் திரும்பி வந்தது அவன் பிழைத்தான்.''** (1 ராஜா 17;21) சரீரத்திலிருந்து ஆத்துமா பிரிந்த போது மரணம் வந்தது. ஆத்துமா மீண்டும் சரீரத்துக்குள் வந்த போது அவன் பிழைத்தான். அதே போல லூக் 8;55ல் இயேசு ஜெப ஆலயத் தலைவனுடைய மகளை உயிர்ப்பித்த போது நடந்தது. என்ன? **''அப்பொழுது அவள் உயிர் திரும்பி வந்தது.**

சரீரம் அழிந்து போகிறது என்று சொல்லும்போது, சரீரத்தில் வாசமாயிருக்கிற ஆவியும் சேர்ந்து அழிவதில்லை. ஆவி வேறு. சரீரம் வேறு. சரீரம் இல்லாமல் ஆவிகள் தனித்து வாழ முடியும். தேவனும், தேவதூதர்களும் அப்படிப்பட்டவர்களே. (யோவான் 4:24; சங் 104:4 லூக் 24:39; எபி 1:14) மனிதனுடைய ஆவிக்கு ரூபமில்லை! அது சரீரத்திலும் வாசமாயிருக்க முடியும். தனியாகவும் இருக்க முடியும் வேதாகமத்தில் பல இடங்களில் ஆவி சரீரமரணத்துக்குப் பிறகு உலாவிக் கொண்டிருக்கிறது என்ற பொருள் படப் போதிக்கிறது. ஆதி 25;8,9,17, 35:29;49:33; எண் 20:26 உபா 32;50 ஆகிய வசனங்கள் மூதாதையர்கள்

மரித்த பிறகு தங்கள் ஜனங்களோடே சேர்க்கப்பட்டார்கள் என்று கூறுகிறது. அதன் பொருள் யாது? இந்த உலக வாழ்க்கைக்குப் பிறகும் அழிந்து போகாத ஒரு நிலையில் சேர்க்கப்பட்டார்கள். வெறுமனே ஏற்கனவே மரித்துப்போனவர்களுடைய சவங்களோடே சேர்க்கப்பட்டார்கள் என்பதல்ல. ஏற்கனவே மரித்துப்போனவர்களுடைய ஆவி தேவனிடத்துக்குச் சென்றதாக வாசித்தோமல்லவா அந்த ஆவிகளோடே சேர்க்கப்பட்டார்கள் என்றே பொருள்.

2 சாமு 12;23ல் தாவீது சொல்வதைக் கவனியுங்கள். **''நான் அதனிடம் (மரித்துப்போன குழந்தையிடம்) போவேனேயல்லாமல் அது என்னிடத்திற்குத் திரும்பி வரப் போவதில்லை''** என்கிறாரே, அதற்கு என்ன பொருள்? குழந்தை இறந்து விட்டபோதிலும் அதன் உயிர் எங்கேயோ ஒரு இடத்தில் இருக்கிறது என்றும், அந்த இடத்துக்கு நான் ஒரு நாளைக்குப் போவேன் என்றும் சொல்லுகிறார் இல்லையா? இயேசு கிறிஸ்து அந்தக் கருத்தை வேறு விதமாய்ச் சொல்லுகிறார். ''சரீரத்தைக் கொலை செய்து, அதன்பின்பு அதிகமாய் ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள். (லூக் 12:4;மத்10:28) அதாவது மரணத்தின் போது சரீரம் மட்டுமே சாகிறது; ஆத்துமா சாகிறதில்லை மனிதன், வெறும் மண்ணும், மிருகம் மற்றும் இதர ஜீவராசிகளின் உயிரும் மட்டும் உடையவனாக இருந்தால் சரீரத்தைத் கொல்லுகிறவர்கள் உயிரையும் கொன்று விட முடியுமே.

வேறொரு சந்தர்ப்பத்தில், கிறிஸ்துவானவர், ஆவி, சரீர மரணத்துக்குப் பிறகும் ஜீவிக்கிறது என்பதைத் கீழ் வரும் வசனத்தில் 'உறுதி' செய்கிறார். மனந்திரும்பிய கள்ளனிடம் **இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்''.** என்கிறார் (லூக் 23:43) அதாவது மரணத்துக்குப் பிறகும் அவனுடைய ஆவி கிறிஸ்துவுடனே கூட பரதீசில் பிரவேசிக்கும். கிறிஸ்துவின் ஆவியும் சரி அந்தக் கள்ளனின் ஆவியும் சரி சரீரத்தோடே அழிந்து போகவில்லை. இடமாற்றம் ஆகி இருக்கிறது. என்று பொருள்படுகிறது அல்லவா?

கூடாகிய சரீரம் இல்லாத ஆவிகள் மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் எங்கோ இருக்கின்றன என்பதற்கு லாசரு ஐசுவரியவான் சம்பவம் சிறந்த சான்றாகும். அங்கே பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் மரித்துப்போன ஆபிரகாமும், சமீபத்தில் மரித்துப்போன லாசருவும், ஐசுவரியவானும்

ஒருவரையொருவர் அடையாளம் தெரிந்து கொண்டு உரையாடுவதை வாசிக்கிறோம். (லூக் 16:19-31)

அதன் பொருள் என்ன? சரீர மரணம் என்பது முற்றிலும் அழிந்து போகும் நிலை அல்ல. சரீரத்தை விட்டு ஆவி இடம் பெயர்ந்து நித்தியமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

சிலபேர் அந்தப் புதிய நிலையில் மகிழ்ச்சியாயிருப்பார்கள் ஏனெனில் அவர்கள் இந்த உலகில் சரீரத்தில் இருந்த பொழுது கர்த்தருக்குப் பிரியமாகவும், அவருடைய உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தும் வாழ்ந்திருப்பார்கள். மற்றவர்கள் பாதாளத்தில் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். ஏனெனில் அவர்கள் பாவத்தில் வாழ்ந்திருப்பார்கள். (2கொரி 5:10) ஐசுவரியவான் கூட இன்றைக்கு அநேகர் நினைத்துக் கொண்டிருப்பது போல மனிதனுடைய சரீர மரணத்தோடு அவன் கதை முடிந்து போகிறது என்று நினைத்துக் கொண்டு இந்த வாழ்க்கையில், அவர்களுக்குத் தேவன் கொடுத்திருக்கிற தாலந்துகளையும் ஐசுவரியத்தையும், பிற சௌகரியங்களையும் சரீரத்தைப் பேணுவதற்கும், உலக உல்லாசத்துக்கும் செலவழித்துக் கொண்டு மாமிசமும் மனதும் விரும்பினதைச் செய்து கொண்டு ஆன்மாவை அசட்டை செய்தான். அவன் சரீர மரணத்துக்குப் பிறகு மிகவும் வருந்தி கண்ணீர் விட்டான். ஆனால் மரணத்துக்குப் பிறகு மனம் திரும்புதல் கிடைக்கவில்லை.

ஆகவே என் அருமை நண்பனே சகோதரியே! தேவன் மனுக்குலத்துக்குக் கொடுத்திருக்கிற விசேஷ அறிவைக் கொண்டு சிந்தி, சீர் தூக்கிப்பார் செயல்படு.

**E.Z. செல்வநாயகம்**

*பாலைக் கடைதல் வெண்ணெயைப் பிறப்பிக்கும்; மூக்கைப் பிசைதல் இரத்தத்தைப் பிறப்பிக்கும்; அப்படியே கோபத்தைக் கிண்டி விடுதல் சண்டையைப் பிறப்பிக்கும்.*

*நீதி 30:33*

# வீண் பழி சுமத்தாதீர்!

**அந்த வனாந்திரத்திலே...சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து .. யாத் 16:2.**

நம்முடைய பிரச்சினைகளுக்காக மற்றவர்கள் மீது பழி சுமத்துவது அநியாயமானது மட்டுமின்றி, கொடூரமானதுமாகும்; இது ஆண்டவரை துக்கப்படுத்தும் செயலாகும். இளம் குற்றவாளிகள் சீர்திருத்த அதிகாரியாக இருந்த பிரெட் கிரிம் என்ற கிறிஸ்தவர், தனது சொந்த மகன் மீதே வீண் பழி சுமத்திய ஒரு தகப்பனுரைப் பற்றிக் கூறுகிறார். தனக்கும் தன் மனைவிக்குமிடையே ஏற்படும் சச்சரவுகளுக்கெல்லாம் அந்தத் தகப்பன் தன் மகனையே குற்றஞ்சாட்டி வந்தான். ''நீ வாய், பேசுவதினுல்தான் உன் அம்மாவும் நானும் சண்டைபோட நேரிடுகிறது! நான் உன்னையும், உன் அம்மாவையும் விட்டுவிட்டுச் செல்வேனென்றுல் அந்தப் பழி உன் மீதுதான்'' என்று அடிக்கடி மகனிடம் கூறிவந்தான். எவ்வளவு கொடூரமானதும், அநியாயமானதுமான குற்றச்சாட்டு! அந்த மனிதனும், அவன் மனைவியுமோ பல ஆண்டுகளாகச் சண்டை போட்டுக் கொண்டுதான் வருகிறார்கள். அந்தத் தகப்பன் ஒரு நாள் திடீரென்று இரத்தக் குழாய் வெடிப்பால் இறந்து போய்விட்டான். மகனின் நிலை பரிதாபகரமாகி விட்டது. தகப்பனின் மரணத்துக்கு அவன்தான் காரணம் என்று தாய்கூட அவனைக் குற்றஞ்சாட்டத் துவங்கி விட்டாள். மகன் மிகவும் மனம் நொந்து இடிந்து போனான்.

நாம் நினைத்த காரியங்கள் சரிவர நடக்கவில்லையென்றுல் நாம் ஏன் மற்றவர்களைக் குறைகூறத் துவங்குகிறோம்? எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டுச் சிறிது காலத்துக்குள்ளாகவே இஸ்ரவேல் ஜனங்கள் வனுந்திரத்தில் முணுமுணுக்கத் துவங்கி விட்டார்கள். தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டபோது, போதிய உணவின்றி அவதிப்பட்டபோது பதறிப்போன அவர்கள், அவர்களை இந்த நிலைக்கு இழுத்து வந்ததாக மோசேயையும் ஆரோனையும் குறை கூறினார்கள். தங்களை வழிநடத்தியவர்களையே பலிகடாக்களாக ஆக்கத் துணிந்துவிட்டார்கள். ஆனுல் இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும், அவர்கள் விசுவாசக் குறைவையும், தமது ஊழியர்களை மீதான அவர்களது அநியாயமான குற்றஞ்சாட்டுதலையும் கண்ட பின்னரும், தேவன் கிருபைகூர்ந்து அவர்களைத் தயவாய் மன்னித்தார். ஆனுல் இஸ்ரவேலர்கள் மீண்டும் அதே

பாவத்தைப் புரிந்தபோது, அவர்களைக் கடுமையாகத் தண்டித்தார் (எண்ணாகமம் 16 அதி. பார்க்கவும்).

இஸ்ரவேல் ஜனங்களிடமிருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ளுகிறோம். வீண் பழி சுமத்துவதினால் பெரும் அழிவு ஏற்-படலாம். பிறர்மீது பழி சுமத்த முயலாதீர்கள். பதிலாக உங்கள் நிலையை ஆராயுங்கள்; உங்கள் தோல்விகளை ஒத்துக்கொள்ளுங்கள்; மன்னிப்புக்காகவும், உதவிக்காகவும் ஆண்டவரை நோக்கி வேண்டுங்கள்.

> மற்றவர் குறைபேசும் நீ உன் குறையை மறவாதே; கண்ணாடி வீட்டிலிருப்போர் கற்களை வீசக் கூடாதே!

**ஏதேனும் ஒரு காரியம் தவறாகி விடும்போது, ஒருவன் புன்னகை செய்கிறான் என்றால், அதற்காக யார்மீது பழி சுமத்தலாம் என்று அவன் கண்டு-பிடித்துவிட்டதால் இருக்கலாம்.**

ராஜநாயகம்

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker: Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi-110049.
Thursdays-7: 15 to 7-30 P. M.
Fridays-- 8: 00 to 8:15 P. M.
Saturdays-8 00 to 8:15 P. M.
Sundays-9 00 to 9: 15 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker: P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker: Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

Oct 90 THIRUMARAI AASAAN.Regd.No.TN/ERD/49

# வாசக அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

திருமறை ஆசான் வாசகர்களின் முகவரிகளை மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்தும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. இதுவரை தங்கள் முகவரிகளை எழுதி அனுப்பாதவர்கள் உடனே அனுப்பி உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். நம்முடைய விலாசம் தான் அவர்களுக்குத் தெரியுமே என்று மெத்தனமாக இராதீர்கள். தயவு செய்து ஒத்துழையுங்கள். நன்றி.

1. பெயர்
2. முழு முகவரி
3. பின்கோடு
4. மாவட்டம்

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E. Z. Selvanayagam.

To

PRINTED MATTER BOOK-POST

If undelivered please return to :
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE - 638 001.